## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| | | | |
|---|---|---|---|
| 2025–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29–ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி தரப்பு 1–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869 ம் ஆண்டு சட்ட எண் 44 வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | முத்துப்பாண்டி | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**29.04.2025 OS.No.47/2020 வா.சா. 2** முத்துப்பாண்டி **ஆஜர்**

**<u>1 ம்–பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>:**

எனக்கு படிக்க தெரியுமா என்றால் தெரியும் . நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் கண்ட சங்கதிகள் நான் சொன்னது தான் என்றால் சரிதான் . நான் லாடனேந்தலில் வசிப்பதற்கு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் வாதி மற்றும் பிரதிவாதியை தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . அவர்களை எந்த வகையில் தெரியும் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. வாதி சொன்னதன் பெயரில் சாட்சி சொல்ல வந்துள்ளேனா என்றால் இல்லை . நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வந்தது. அதன் அடிப்படையில் சாட்சி சொல்ல வந்துள்ளேன் . அந்த சம்மனை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோனா என்றால் இல்லை . நான் சொல்வது போல் நீதிமன்றத்தில் இருந்து எனக்கு எந்த சம்மனும் வரவில்லை என்றாலும் பிரதிவாதியை யாரென்றே தெரியாது என்றாலும் , நான் வாதியின் நெருங்கிய நண்பர் என்ற அடிப்படையில் வாதி கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல . நான் லாடனேந்தலில் வசிக்கவில்லை என்றாலும் , அதனால் தான் அடையாள அட்டை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல . எனக்கு வழக்கு பற்றியோ வழக்கு சொத்து பற்றியோ எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல . 2012 ம் வருடம் வாதி கிரையம் வாங்கிய சொத்தை பொறுத்து தான் வழக்கு என்றால் சரிதான். 2012 ம் வருடம் வாதி வாங்கிய சொத்தை பொறுத்து தான் தீர்பபும் தீர்ப்பாணையும் வழங்க வேண்டி எனது நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

**<u>2 ம்–பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.